தோலகட்டி நெல்லி ரசம்
மக்கள் மனதில் கடந்த 60 வருட காலமாக நிலைத்த பெயர்
ஏகப் பிரதிநிதிகளும் விநியோகத்தரும்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
யாழ்நகர்

# உதயன்

**உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை**

விலை ரூ. 1/=

செனித்
உங்கள் வியாபாரப் பொருட்களை துரிதமாக விற்பனை செய்வதற்கும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் மக்கள் மனதில் நிலை பெறச் செய்வதற்கும்
நாடுங்கள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
யாழ்நகர்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு கார்த்திகை மீ 22உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 24 (07-12-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 11





நாவலர் குருபூசை இம்முறை புதிய அணுகு முறையில் கொண்டாடப்பட்டது. வன்செயலால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் தஞ்சமடைந்திருப்பவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் நடைபெற்ற விசேஷ பூசைகள் அன்னதானங்கள் குருபூசையை இம்முறை சிறப்பித்தன. குருபூசையின் ஆரம்ப நிகழ்ச்சி நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றது. அங்கு நாவலர் சிலைக்கு யாழ் குளோபல் அதிபர் திரு. எம். சிவராசா மலர்மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும் — நல்லை ஆதீனத்தில் வழங்கப்பட்ட அன்னதானத்தில் பங்கு கொண்ட மக்களில் ஒரு பகுதியினரை இரண்டாவதுபடத்திலும் யாழ் மகளிர் பேரவை அகதிகள் முகாமில் நடந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட அகதிகளில் ஒருபகுதியினரை மூன்றுவது படத்திலும் காண்க. (படப்பிடிப்பு:- சண். ஜோண்சன்)

## காங்கேசனில் மா கப்பல்

திருகோணமலை டிச. 7

13,970 மூடை 'பிரிமா' மாவுடன் கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வெள்ளிக்கிழமை இரவு வந்தடைந்தது.

கப்பலின் பெயர் 'பெந்தோட்டை'. திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து இக் கப்பல் வந்தது

3,300 மெட்ரிக் தொன் மாவுடன் இன்னொரு கப்பல் இரண்டு தினங்களில் காங்கேசன் துறை வந்து சேரும். 'கொழும்பு' என்ற பெயருள்ள கப்பலில் மா ஏற்றும் வேலைகள் திருகோணமலைத் துறைமுகத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

## சேருவில இராணுவ முகாமில் 10 பேர் சுட்டுக் கொலை இருவர் சிங்களவராம்

திருகோணமலை, டிச.7

இராணுவ முகாமில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 10 பேர், நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 6.30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அவர்களில் இரண்டு சிங்களவர்களும் அடங்குவர்.

தெஹிவத்தையில் அண்மையில் இடம்பெற்ற கண்ணி வெடி விபத்தில் ஆறு இராணுவ வீரர்கள் சொல்லப்பட்ட சம்பவம் தெரிந்ததே.

அதைத்தொடர்ந்து ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலில் பலர் விசாரணைக்காக சேருவில இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

அவர்களில் 10 பேரே இன்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தப்பியோட முயற்சிக்கையிலேயே இவர்கள் சுடப்பட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் இறந்தவர்களின் மரணவிசாரணைகள் நடைபெற்றன.

பின்னர் சடலங்களை பாதுகாப்புப் படையினர் எரித்து விட்டனர்.

மரண விசாரணைகளை மூதூர் பதில் நீதவான் திரு. எம். கே.செல்வராசா நடத்தினார்.

விசாரணை முடிவில் நீதியான கொலைகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இறந்தவர்களின் பெயர்கள் வருமாறு:-

எம். விஜயகமூர்த்தி, எஸ். கந்தசாமி பி. நடேசபிள்ளை எஸ்.கனகரட்னம் கே.தங்கவேலு, பி. துரைராசா, ஏ. சேனுதிராசா, ஆர். தங்கத்துரை, ஆர்.ஏ. கருணதாஸ, ஆர்.எம்.பி. குணரத்ன.

# விசேஷ அடையாளக் கார்ட் யாழ். மாவட்டத்துக்கு இல்லை

## திருமலையில் மட்டுமே அமுல்

கொழும்பு, டிச. 7

கொந்தளிப்பு சூழ்நிலை நிலவும் பகுதிகளில் வாழும் மக்களுக்கு விசேஷ அடையாளக் கார்ட் வழங்கும் திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்போது அமுலுக்கு வராது.

திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா, மன்னர் ஆகிய பகுதிகளிலேயே விசேஷ அடையாளக் கார்ட் வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

அதுவும் முக்கியமாக திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே உடனடியாக அமுலுக்கு வரும் என அறியப்படுகிறது.

இந்த விசேஷ அடையாள 'கார்ட் வழங்கும் திட்டம் நடை முறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன பொது சனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரகடனப் படுத்தி இருப்பது தெரிந்ததே.

வெளியார் சுதந்திரமாக நடமாடுவதைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இப் புதிய திட்டம் கொண்டு வரப்பட உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தை பிரதானமாகக் கருத்திற் கொண்டே, விசேஷ அடையாளக் கார்ட் கொண்டு வரப்படுவதாகத் தெரிகின்றது.

அண்மையில் பிரிட்டனில் இருந்து வந்த இரண்டு பத்திரிகையாளர்கள் திருகோணமலையில் தங்கியிருந்து போராளிகளின் நடவடிக்கைகளை வீடியோ படம் பிடித்ததும் பின்னர் அது பிரிட்டிஷ் டெலிவிஷனில் திரையிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

### முச்சந்தி முரளி



முந்தி ஒருக்கா, ஒவ்வொரு ரேட்டாலை ஓடுற வாகனங்களுக்கும் ஒவ்வொரு நிறத்திலை ஏதோ பெர்மிட் குடுத்த வையெல்லே, அது புஸ்வாணமாகிப் போனது போலைத்தான் இந்த விசேஷஅடையாளக் கார்ட்டும் போகுமோ யாருக்குத் தெரியும்!

### ★ மூளைக்காய்ச்சல் பத்துப் பேர் பலி!

கொழும்பு டிச. 7

அனுராதபுரம் மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் பத்துப் பேரைப் பலி கொண்டது. மற்றும் 20 பேர் மிக ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவென விசேஷ வைத்தியக் குழு ஒன்று இங்கிருந்து விரைந்தது.

ஒரு வகை நுளம்புக் கடியே மூளைக் காய்ச்சலைக் கொண்டு வருகிறது.

# தீர்வைக் கண்டுபிடிப்பது இலங்கை அரசின் பொறுப்பு

## பாலகுமார் பேட்டி

யாழ்ப்பாணம் டிச 7

இலங்கை அரசாங்கமே பிரச்சினைகளை உருவாக்கியது ஆகவே அவர்கள் தான் தீர்வையும் கண்டு பிடிக்க வேண்டும்.

ஈழப்புரட்சிகர அமைப்புப் பிரமுகர் திரு. பாலகுமார் 'புரொன்ட் லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. பாலகுமார் தனது பேட்டியில் மேலும் சொன்னதாவது:

மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்கக் கூடிய உகந்த சூழ்நிலை தற்போது இல்லை.

அவசரகாலச் சட்ட விதிகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், தொழிற்சங்கங்கள் மீதான கட்டுப்பாடு முதலியவற்றை ரத்துச் செய்ய வேண்டும். தமிழ், சிங்கள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

இவற்றைச் செய்வதன் மூலம்தான் மாற்று யோசனைகளை நாம் சமர்ப்பிக்கக்கூடிய உகந்த சூழ்நிலையை இலங்கை அரசு உருவாக்க முடியும்.

இந்திய அரசுடன் எப்பொழுதும் பேசத்தயாராக இருக்கின்றோம்.

வேறு எவரும் தமிழர் அபிலாஷைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் முட்டுக்கட்டையாக இருக்கமாட்டோம். இதை நாம் தெளிவாகக் கூறிவிட்டோம்.

இலங்கை அரசாங்கமே பிரச்சினைகளை உருவாக்கியது. ஆகவே அவர்கள் தான் தீர்வையும் கண்டு பிடிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் கௌரவமாகவும் பாதுகாப்புடனும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கூறினர்.

நாமும் இந்திய அரசாங்கமும் நியாயமான தீர்வையே விரும்கின்ளும்.

இப்படி திரு. பாலகுமார் பேட்டியில் சொன்னர்.

(திரு. பாலகுமாரின் பேட்டி முழு விவரம் நாளை உதயனில் வெளிவரும்)

## சரக்கு ரயில் தடம் புரண்டது

கொழும்பு. டிச. 7

கண்டியிலிருந்து கொழும்பு வந்த ரயில் மருதானைக்கும் கோட்டைக்கும் இடையில் தடம் புரண்டது.

இதனல் கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படவேண்டிய ரயில்கள் மருதானையில் இருந்தே புறப்பட்டன.

## கச்சேரி வங்கி கிளையில் 14, 15 இல் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், டிச. 7

யாழ்ப்பாணம் கச்சேரி வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு டிசம்பர் 14, 15ஆம் திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் வைத்து ஓய்வூதியம் வழங் ப்படும்.

சிவில் பென்ஷன் டிசம்பர் 14ஆம் திகதி காலை 9மணிக்கும் 1மணிக்கும் இடையில் வழங்கப்படும்.

ஆசிரியர், அவர்களின் விதவைகள், அயுதப் படையினர், அவர்களின் விதவைகள், தர்மப் பணம் மற்றும் பென்ஷன்கள் டிசம்பர் 15ஆம் திகதி காலை 9 மணிக்கும் 1மணிக்கும் இடையில் வழங்கபபடும்.

## சமாதான சபையின் புதுவித தீர்ப்பு!

நல்லூர், டிச. 7

யாழ்ப்பாணம் மாக்கெட் நிறுவனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிலையமொன்றில் கொள்ளையிட முயன்ற மூவர் இயக்கம் ஒன்றைச் சேர்ந்த இரவுக் காவலில் ஈடுபட்ட இளைஞர்களினல் கையும்மெய்யுமாக பிடிக்கப்பட்டனர்.

வியாழன் இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

அந்த மூவரையும் அவர்களின் நிரந்தர வசிப்பிடத்தில் உள்ள சமாதான சபைக் குழுவிடம் தீர்ப்புக்காக இளைஞர்கள் கையளித்தனர்.

பின்னர் இந்த மூவரும் சமாதான சபையினர் மொட்டையடித்து மக்கள் மத்தியில் விடுதலை செய்தனர் என்று தெரிய வருகிறது.

## ஜி. சி. ஈ. பரீட்சை இன்று ஆரம்பம்:

## அடையாளக் கார்ட் இல்லாத மாணவருக்கு மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச 7

தேசிய அடையாளக் கார்ட் இல்லாத பாடசாலைப் பரீட்சார்த்திகள், ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சை எடுப்பதற்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கல்வித் திணைக்களம் மாற்று ஒழுங்குகளைச் செய்துள்ளது.

யாழ் குடாநாட்டில் இருந்து இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களில் சிலருக்கு தேசிய அடையாள கார்ட் கிடையாது.

இவர்கள் அடையாள கார்ட் கோரி ஆட்பதிவுத் திணைக்களகத்திற்கு அனுப்பிய விண்ணபபங்கள் வயது குறைந்த காரணம் காட்டி நிராகரிக்கப்பட்டதால்தான் இந்தநிலை.

16 வயதுக்கு ஒரு நாள் குறைந்தாலும், தேசிய ஆட்பதிவுத் திணைக்களம் விண்ணப்பங்களை ஏற்கமறுத்து விடுகின்றது.

இந்த ரீதியில் யாழ் குடாநாட்டில் அடையாளக் கார்ட் இல்லாத மாணவர்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் குறைந்தது 75 பேர் வரையில் இருக்கின்றுர்கள்.

இவர்களுக்கு பரீட்சை எழுதக்கூடியதான திட்டம் ஒன்றை யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை தயாரித்து உள்ளார்.

இதற்கு இணங்க பரீட்சார்த்திகளின் படங்களில் பணிப்பாளரே கையொப்பம் இட்டு கொடுக்கிருர். பரீட்சார்த்தியின் படம் ஒன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ★ பகிரங்கத் தூக்கு சீதனக் கொடுமைக்கு

ஜெய்ப்பூர், டிச. 7

சீதனக் கொடுமை இழைத்த பின்னர் இரண்டு பெண்களை தீயிட்டுக் கொளுத்திய இருவருக்கு பகிரங்கத் தூக்கு.

இருவரும் பொதுப் பூங்கா ஒன்றில் மக்கள் முன்னிலையில் வைத்து தூக்கிலிடப்படுவார்கள்.

இந்திய நீதிமன்றம் ஒன்று இப்படித் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் சீதனக் கொடுமை இழைத்த குற்றத்திற்கு இப்படிப் பட்ட கடுமையான தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டது இதுவே முதல் தடவை.

தூக்குத் தண்டனை தீர்ப்புக்கு உள்ளானவர்களில் ஒருவர் லட்சுமி தேவி. பொருதிய சீதனத்தை கொடுக்காததற்காக தனது மருமகளை தீயிட்டுக் கொளுத்தினராம் இவர்.

மற்றவர் ஜெகதீஸ் கார்த்திக். இவர் தனது மனைவியைக் கொன்றவராம்.

இவர்களுக்கு எதிரான கொலைக்குற்றங்களை மேற்கு இந்தியாவின் ஜெய்ப்பூர் மேல்நீதிமன்றம் விசாரணை செய்தது.

இந்தியாவில் சீதனக் கொடுமைகள் மிகுந்திருப்பதும் இதனைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த நவம்பரில் புதிய கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன என்பதும் தெரிந்ததே.

# பிரச்சினைக்குத் தீர்வு காண இராணுவ சமபலம் தேவை

## உமாவின் பேட்டி

யாழ்ப்பாணம், டிச.7

இராணுவ சம பலம் இருந்தால் ஒழிய, இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

இதை நான் வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியிடம் நேரடியாகக் கூறி விட்டேன்.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர், திரு. உமா மகேஸ்வரன் 'புரொன்ட்லைன்' (நவ.30 – டிச.13) சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் இராணுவத் தலையீட்டைக் கோரவில்லை.

சர்வதேச ரீதியில் இந்தியா எமக்கு உதவ வேண்டும்.

பலஸ்தீன விடுதலை இயக்கம், நமீபியா விடுதலை இயக்கமான சுவாப்போ, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆகியவற்றிற்கு ராஜதந்திர அங்கீகாரம் வழங்கியது போல—

எங்களுக்கும் ராஜதந்திர அங்கீகாரம் இந்தியா அளிக்க வேண்டும்.

அத்துடன் இந்தியா எங்களுக்கு ஆயுதங்கள் தந்து உதவ வேண்டும்.

இப்படி திரு. உமா மகேஸ்வரன் பேட்டியில் தெரிவித்தார்.

"இரண்டு மாகாண சபைகளை ஏற்றுக் கொண்டால் ஒரு வருடத்தினுள் கிழக்கு மாகாணத்தை இழந்துவிடுவோம்.

" 'தி' இணைப்பையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சமர்ப்பித்த

(4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## இயக்குநர் சோழராஜனின் இதயம் கவர்ந்த மூவர்

''நாகம்'' திரைப்படத்தின் வாயிலாகச் சிறந்த இயக்குநர் என்னும்தகுதியைப் பெற்றிருப்பவர் சோழராஜன். இராம. நாராயணனின் தயாரிப்புகளில் புகழ் பெற்று விளங்கி வரும் இவர், தான் இயக்கிய படங்களில் ஜொலித்த நட்சத்திரங்களைப்பற்றி கூறுகிறார்.

**அர்ஜுன்**

சுறுசுறுப்பும் சண்டைக் காட்சிகளில் விறு விறுப்புமுள்ள புதுமுகம். இவரை இராம. நாராயணன் தான் தமிழ்ப் படவுலகுக்கு அறிமுகப்படுத்தினர். எவ்வளவு பயங்கரமான சண்டைக் காட்சியாக இருந்தாலும், துணிவோடு மோதுகின்ற இளைஞர்.

முரட்டுத்தனமான தாதாக்கிரங்கள் எதுவாக இருந்தாலும் அதில் தனி ஆற்றலுடன் நடிக்கக் கூடியவர்.

**இளவரசி**

படப்பிடிப்பிற்குக் குடும்பத்தோடு காரில் வந்து இறங்கினாலும் நடிக்க வந்து விட்டால் ஒரு கல்லூரி மாணவி போல் மாறி விடுவார். அழகாகச் சிரித்துக் கொண்டு கெமராவுக்கு முன் வந்து நிற்பார்.

ஏதாவது ஒரு காட்சி 'ஓகே' ஆனவுடன் என்னிடம் வந்து குழைந்து நின்றவாறு, ''சார், டேக் உங்களுக்குத் திருப்தி தானே?'' என்று கேட்பார். ''திருப்தி தான்'' என்றாலும் அவர் திருப்தியடைய மாட்டார். ''எதற்கும் இன்னொரு டேக் எடுக்கச் சொல்லுங்களேன்'' என்பார்.

அவரது திருப்திக்காக மீண்டும் அதே காட்சியை சில படங்களில் நான் படமாக்கியுள்ளேன்.

**ஆனந்த் பாபு**

டிஸ்கோ நடனமாடுவதில் இன்று பெரும் புகழ் பெற்று இருக்கும் புதுமுக நடிகர் 'இளமை' படத்தில் ஒரு காட்சியில் தான் அணிந்திருக்கும் பூட்ஸைக் கழற்றிக் கொண்டும், சட்டையைக் கழற்றியவாறும் நடனமாட விரும்பினர். ''அப்படிப்பட்ட டிஸ்கோ நடனம் நன்றாக இருக்குமா?'' என்று நான் தயங்கினேன். ஆனால் இவர் தயங்காமல் அப்படியே அந்தப் படத்தில் நடனமாடி என்னையும், ரசிகர்களையும் பிரமிக்கச் செய்தார்!

தினசரி சினிமா

# சென்னை மெரீனா கடற்கரையில் கைப்பற்றப்பட்ட மீன்பிடி வள்ளங்களை திருப்பி ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு

## வழமைபோல் மீனவர்கள் மீன் பிடிக்கவும் அனுமதி

சென்னை, டிச. 6

சென்னை மெரீனா கடற்கரை மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கட்டுமரங்கள், மீன்பிடி வள்ளங்கள், வலைகள் ஆகியவற்றை அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கும்படி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன் மீனவர்கள் வழமைபோல் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது.

உயர் நீதிமன்றம் மீண்டும் செவ்வாய்க்கிழமை இந்த விவகாரம்பற்றி விசாரிக்கும்.

மகளிர் உரிமை இயக்கமும் மற்றும் சில அமைப்புகளும் தாக்கல் செய்த வழக்கை அடுத்தே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

மெரீனா கடற்கரையில் நின்ற வள்ளங்கள், கட்டுமரங்கள், மீன்பிடி வலைகள் ஆகியவை தமிழ்நாடு பொலீஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த வழக்குத் தாக்கலானது.

மெரீனா கடற்கரையைத் துப்புரவு செய்யும் திட்டத்தின்கீழ் இவை பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கைக்கு எதிராக மீனவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் வன்முறையில் முடிவடைந்ததும், ஆறு மீனவர்கள் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதும் தெரிந்தவையே.

## எம்.ஜி.ஆர். இல்லம்முன் தீக்குளிப்பு முயற்சி

சென்னை, டிச. 6

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் ராமாவரம் இல்லத்திற்கு முன்பாக தீக்குளிக்க முயற்சித்த இளைஞன் ஒருவனை பொலீஸார் கைது செய்தனர்.

சேலம் நகரைச் சேர்ந்த அன்பழகன் தான் அந்த இளைஞன் என்று அடையாளங் காணப்பட்டது.

இளைஞனிடம் இருந்து தீப்பெட்டி, மண்ணெண்ணெய் தகரம் ஆகியன கைப்பற்றப்பட்டன.

கான்ஸ்டபிள் வேலைக்கு முயன்றும் கிடைக்கத் தவறியதால்தான் அவர் தீக்குளிக்க முயற்சித்தாராம்.

### நாகேஸ்வரராவ் சுகயீனம்

சென்னை, டிச. 6

பிரபல திரைப்பட நடிகர் ஏ. நாகேஸ்வரராவ் சுகயீனம் அடைந்து சென்னை அப்பலோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 'தேவதாஸ்' படத்தின் மூலம் பிரபலம் அடைந்தவர் இவர்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நாகேஸ்வரராவை ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தார்.

ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி. ராமராவும் சென்று பார்த்தார்.

## மூளை சத்திர சிகிச்சை செய்த போலி டாக்டர்

பெங்களூர், டிச. 6

சத்திரசிகிச்சை நிபுணர் என்று கூறிக்கொண்டு மூளைச் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்ட போலி டாக்டர் ஒருவரை, பெங்களூர் பொலீஸார் கைது செய்தனர். 'டாக்டரின்' மூன்று உதவியாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

எத்தனை பேருக்கு மூளை சம்பந்தமான சத்திர சிகிச்சைகளை இந்த போலி டாக்டர் மேற்கொண்டார் என்பது பற்றி இனித்தான் விசாரிக்க வேண்டும் — இப்படி பெங்களூர் நகர பொலீஸ் கமிஷனர் பி ஜி. ஹலன்தர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

32 வயதான இந்தப் போலி டாக்டரின் பெயர் பாபு.

எஸ். எஸ். எல். ஸி பரீட்சை மட்டுமே சித்தி அடைந்த இவர் ஸர்ஜரியில் பட்டம் பெற்றவர் என்று கூறிவந்தாராம்.

## இருஷ்ணன் பிறந்த ஊரை உல்லாச தலமாக்கக் கோரிக்கை

சிவகங்கை, டிச. 6

இருஷ்ண பகவான் பிறந்த திருக்கோஷ்டியூர், உல்லாசப் பிரயாண தலமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அரசாங்கத்தை இந்த விடுத்த வேண்டுகோளில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

ஸ்ரீரமானுஜரின்வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டது திருக்கோஷ்டியூர் தலம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்கோஷ்டியூர் ஆலயத் திருக்கோபுரத்தில் உள்ள புல், பூண்டுகளை அகற்றும் திருப்பணியில் கலந்து கொண்டார்.

# ஆசிய கறுப்பு இனத்தவரும் பிரிட்டிஷ் பொலீஸ் படையில்

## பிரிட்டிஷ் வர்த்தக அமைச்சர் கோரிக்கை

லண்டன், டிச. 6

பிரிட்டிஷ் பொலீஸ் படையில் ஆசிய இனத்தவர்களும் கறுப்பு இனத்தவர்களும் நிறையச் சேர்க்கப்பட வேண்டும்.

இப்படி பிரிட்டிஷ் வர்த்தக அமைச்சர் திரு. இயோன் பிரிட்டன் கூறினர்.

'ஆசியா ரேடர்' என்ற சஞ்சிகை வெளியிட்டு விழாவில் பேசுகையில் திரு. பிரிட்டன் சொன்னதாவது;

இனபேதத்தை நாம் ஒழிக்க வேண்டும். பிரிட்டனில் இந்தியர்கள் புதிய வர்த்தகத் துறைகளை அறிமுகம் செய்து வருகிறார்கள்.

இவ்வைபவத்தில் இந்தியத் தூதர் பிசி. அலெக்ஸாண்டர், துணை கமிஷனர் திரு.எஸ் கே கரேரா ஆகியோரும் பேசினர்.

### கருத்து முரண்பாடு

டாக்கா, டிச 6

'சார்க்' வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாட்டில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஆப்கானிஸ்தான்—ரஷ்யா விடயத்தில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

## தமிழ்நாடு ஆசிரியர் மறியல் போராட்டம்

### 2 தினங்கள் ஒத்திவைப்பு

சென்னை, டிச. 6

தமிழ்நாடு ஆசிரியர்களின் மறியல் போராட்டம் 2 தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்துக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதே மறியல் போராட்டம் ஒத்திவைப்புக்குக் காரணம் ஆகும்.

தமிழ்நாடு ஆசிரியர்களின் 10 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை இரண்டரை மணிநேரம் பேச்சுவார்த்தை நடந்தது.

இந்தப் பேச்சுவார்த்தை வெள்ளிக்கிழமை தொடர இருந்தது.

ஆசிரியர்கள் 30 சதவீத சம்பள உயர்வு கோருகிறார்கள் என்றும், அப்படிக் கொடுத்தால் அரசுக்கு 308 கோடி ரூபா (இந்திய ரூபா) செலவாகும் என்றும் தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூறினர்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## உணவு முத்திரை விநியோகம் ஆரம்பம்

கொக்குவில், டிச 7

16 ஆவது தொடர் உணவு முத்திரைகள் தற்போது உதவி அரசாங்க அதிபர்களினால் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே உணவு முத்திரை பெற்று வந்தவர்களுக்கு மட்டுமே உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன.

## கூட்டுறவு மூலம் வடக்கையும் கிழக்கையும் இணைத்தவர் வீரசிங்கம்

### சிரார்த்த தினத்தில் உரை

கொக்குவில் டிச. 7

''கூட்டுறவு இயக்கத்தின் மூலம்,வடக்கையும், கிழக்கையும், இணைத்து வடபகுதி கொக்குவில் மேற்பார்வைச் சபையை அமைத்த பெருமை கூட்டுறவுத்தந்தை அமரர் வீரசிங்கத்தையே சாரும்''

அமரர் வீரசிங்கத்தின் 21வது சிரார்த்த தினத்தை ஒட்டி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபையின் முன்னாள் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர். திரு. எஸ். சிவமகாராசா தலைமையில் கருத்தரங்கு நடந்தது.

கருத்தரங்கில் திரு. பொ. செல்வரத்தினம் தொடர்ந்து பேசுகையில்;

அமரர் வீரசிங்கம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சமயம், சோல்பரி அரசியல் திட்டத்தில் 29 வது சரத்தின் அவசியத்தை வலியுறுத்தி வாதாடினர்.

ஆங்கில மொழியில் ''கூட்டுறவின் தத்துவம்'' என்னும் நூலை எழுதிய முதல் தமிழராகவும் அமரர் வீரசிங்கம் திகழ்ந்தார் என்றார்.

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் பேசுகையில்

புனித கூட்டுறவு இயக்கத்தின் மூலம் எவ்வளவு இலாபம்தேடலாம்.என்ற நோக்கம் இல்லாது எவ்வளவு சேவை செய்யலாம் என்ற நோக்கம் இருக்க வேண்டும் என்றார்.

# ஜீ.சி.ஈ. பரீட்சைக்கு மூதூரில் தோற்ற முடியாத நிலை

## 2 மாணவிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டதால் அச்சம்

திருகோணமலை, டிச. 7

பாதுகாப்பு இன்மை காரணமாக ஜீ. சி. ஈ. பரீட்சைகளை மூதூர் மாணவர் எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சங்கீதப் பரீட்சை ஒன்றுக்காக மூதூரில் இருந்து திருகோணமலைக்கு வந்த இரண்டு மாணவிகள் பாதுகாப்புப் படையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். இன்னும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில் மூதூர் மாணவ, மாணவிகள் எப்படி திருகோணமலைக்கு வந்து ஜீ. சி. ஈ. பரீட்சைகளை எடுப்பது? —இப்படி மூதூர் பிரஜைகள் குழு, திருகோணமலை பிரஜைகள் குழு ஆகியன கல்வித் திணைக்களத்திற்கு முறையிட்டுள்ளன.

## வடக்கில் அரசியல், பேச்சு சுதந்திரம் இல்லை

### சென். பற்றிக்ஸ் வைபவத்தில் உரை

நல்லூர், டிச. 7

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று அரசியல் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வேளையில் நாம்துணிவுடன் வாழ வேண்டும்.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் விளையாட்டு அரங்கு ஒன்றினைத் திறந்து வைத்த யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இப்படிக் கூறினர்.

அவர் மேலும் அங்கு கூறுகையில், 'ஒரு கிறிஸ்தவ பாடசாலையில் கிறிஸ்தவருடைய பெயரில் அமைக்கப்பட்ட இந்த அரங்கை இந்து மதத்தவன் ஆகிய நான் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்'' என்றார்.

தோமஸ் விடுதி மண்டபத்தை அதி வணக்கத்திற்குரிய ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை திறந்து வைத்தார்.

அவர் அங்கு உரையாற்றும்பொழுது, மாணவரின் வளர்ச்சியில் கல்வி, படிப்பு, விளையாட்டு மிகவும் முக்கிய மானவையாகும்.

அதற்காகவே எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை விடுதிகளில் தங்க வைத்து படிப்பிக்கிறார்கள்.

'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்' அதேபோல் சிறுவயதில் இருந்தே மாணவர்கள், விளையாட்டு, படிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டு எமது நாட்டிற்கு சிறந்த சேவையாளராக வர வேண்டும் என்றார்.

கல்லூரி அதிபர் பிரான்சிஸ் குருஸோஅன்னைய விழாவிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில், இளைஞர் ஆண்டின் இறுதிக் கட்டத்தில், நாம் இளைஞர்களுக்குப் பரிசாகக் கொடுப்பது இந்த இல்லமும் இந்த விளையாட்டு அரங்குமே என்றார்.

குறுகிய காலத்தில் கட்டடங்களை நிர்மாணித்து உதவிய வர்களுக்கு ஆணையாளர் பரிசில்களை வழங்கினர்.

விடுதி மாணவர்களுக்கான பரிசில்களை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ராஜன் கதிர்காமர் வழங்கினர்.

கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக கல்லூரியில் சேவையாற்றி கால் சுகயீனமுற்றிருக்கும் திரு. இராயப்புவுக்கு மடித்து எடுத்துச் செல்லக்கூடிய முச்சக்கர வண்டி ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## சுன்னாகம் கொலைச் சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், டிச 7

விளக்க மறியலில் இருக்கும் சுன்னாகம் கொலைச் சந்தேக நபரைப் பிணையில் செல்ல யாழ் மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

எதிரிதரப்புச் சட்டத்தரணி திரு. ஆர்: ஈ. தம்பிரத்தினம் சமர்ப்பித்த பிணை மனுவைத் தொடர்ந்து மேல்நீதிமன்ற நீதிபதி திரு. டி. ஆனந்தகுமாரசாமி இவ்வுத்தரவை வழங்கினர்.

இக்கொலை வழக்கில் செல்லன் நடேசன் சந்தேக நபராக இருக்கிறார். 18-11-81இல் ஞானமுத்து திருச்செல்வம் என்பவரைக் கொலை செய்தார் என்பது அவர் மீது உள்ள குற்றச்சாட்டு.

சந்தேக நபரைக் கைது செய்த சுன்னாகம் பொலீஸார் அவரை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். யாழ்ப்பாண நீதிமன்றம் அவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்தது.

யாழ்ப்பாண விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் நீர்கொழும்பு விளக்க மறியல்சாலைக்குப் பின்னர் மாற்றப்பட்டார்.

இவருக்கு எதிரான பூர்வாங்க விசாரணை யாழ்ப்பாண நீதிமன்றில் நடைபெற்றது. அரச தரப்பு சாட்சியங்களை நெறிப்படுத்தியது.

சந்தேக நபர் நீர்கொழும்பு விளக்க மறியல்சாலையில் பல துன்பங்களை அனுபவிக்கிறார். தனது சட்டத்தரணிகளின் ஆலோசனைகளைப் பெறும் வாய்ப்பு அவருக்கு இல்லை. இன்றுள்ள பதற்ற நிலையில் அவரது உயிருக்கு ஆபத்து விளையலாம் என்று உறவினர்கள் அஞ்சுகிறார்கள் என்று சட்டத்தரணி திரு. தம்பிரத்தினம் வாதம் செய்தார்.

சந்தேக நபர் 4 ஆண்டுகள் 14 நாட்கள் விளக்க மறியலில் இருப்பதாலும் பூர்வாங்க நீதிமன்ற விசாரணை பூர்த்தி அடைந்துள்ளதாலும் சில கட்டுப்பாடுகளுடன் சந்தேக நபர் பிணையில் செல்வதை அனுமதிக்க முடியும் — இவ்வாறு அரச தரப்பு சட்டத்தரணி திரு. ஐயாத்துரை ஞானதாசன் குறிப்பிட்டார்.

இதனை அடுத்தே பிணை வழங்கப்பட்டது.

## பொது மக்களுக்கு உதவவே பாவனையாளர் சங்கங்கள்

### அமைப்புக் கூட்டத்தில் உரை

வட்டுக்கோட்டை டிச. 7

வியாபாரிகள் பலர் பொருள்களின் விலைகளை அதிகரித்தும் பழுதான பொருள்களை விற்பனை செய்தும் அவசிய தேவையான பொருள்களைப் பதுக்கி வைத்தும் பொது மக்களுக்குக் கஷ்டத்தை விளைவித்து வருகின்றனர். விலைகூட்டி விற்றல், பதுக்கி வைத்தல் முதலான குறைபாடுகளை ஒழிப்பதற்காகவே பாவனையாளர் சங்கம் இன்று ஆரம்பிக்கப்படுகிறது.

சித்தன்கேணி மாதர் சங்க மண்டபத்தில் திரு. ஆர். எம். தியாகராசா தலைமையில்(24-11-85)ல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட பாவனையாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைகிழக்கு கிராம சேவையாளர் திரு. ஆ. முருகேசு மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து அங்கு பேசும்போது:

'கிராமங்கள் தோறும் பாவனையாளர் சங்கங்களை அமைத்தால்மட்டும் போதாது. அவற்றைச் சிறந்த முறையில் இயக்கவும் வேண்டும். பொது மக்கள் தரமான உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் பாவனையாளர் சங்கங்கள் பணியாற்ற வேண்டும்' என்றார்.

புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. திருமதி. பேரின்பநாயகி சுப்பிரமணியம் நன்றி நவின்றார்.

## டுபாக்கோ கம்பனி அன்பளிப்பு

யாழ்ப்பாணம் டிச.7

யாழ்ப்பாணம் ''இந்து போர்ட்''டால் நடத்தப்படும் திருநெல்வேலி அனாதைகள் இல்லத்துக்கு சிலோன் டுபாக்கோ கம்பனி ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்தது.

அனாதைகள் இல்லத் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகத்திடம் அதற்கான காசோலை அண்மையில் வழங்கப்பட்டது.

சிலோன் டுபாக்கோ கம்பனி வட பிராந்திய விற்பனவு முகாமையாளர் திரு.ஆர்.பி.சி.அரியரத்தினம் இதற்கான காசோலையை வழங்கினர்.

**Rajeevan Travels**

பாஸ்போட், பொண்ட், விசா, விமான ரிக்கற் அவசரகால பாஸ்போட் மற்றும் அனைத்துக்கும் உடன் தொடர்பு கொள்க.

**RAJEEVAN TRAVELS**

42, மணிக்கூட்டு வீதி
(குணம் வீடியோவுக்கு முன்பு)
யாழ்ப்பாணம்

உதய சங்கற்பம்

நாட்டிற்கு வீரர்கள் தேவைப்படுகிறார்கள். வீரர்களாக வாழுங்கள்,
மலை போன்று உறுதியாக இருங்கள்.
உண்மை எப்போதும் வெல்லும்.

- சுவாமி விவேகானந்தர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7-12-85
தொலை பேசி: 24805 22073
த. பெ. 23

## பிரச்சினைக்குத் தீர்வு யாருடைய கையில்?

தென் ஆசியப் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கத்தின் முதலாவது உச்சி மாநாடு பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் இன்று ஆரம்பமாகின்றது. அந்த மாநாட்டைவிட தமிழ்மக்களாகிய எமது கவனத்தை ஈர்ப்பது அங்கு நடக்கும் ராஜீவ்—ஜே.ஆர். சந்திப்புத்தான். இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக இரு தலைவர்களும் ஒருமணிநேரம் தனிப்பட்ட முறையில் இன்று பேசுகிறார்கள்.

இந்தநாட்டின் இனப்பிரச்சினை நாட்பட்ட விவகாரம். மிகவும் ஆழமானது. சிக்கலானது. மிக நுணுக்கமாக ஆராயப்படவேண்டியது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 1957ஆம் ஆண்டு தொடக்கம் எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் தோல்வி கண்டன. 1983ஆம் ஆண்டில் இந்தியா இவ்விஷயத்தில் அக்கறை காட்டிய பின்னர் ஒரு புதிய திருப்புமுனை தோன்றியது. எனினும் ராஜீவ் பதவி ஏற்ற பின்னர் விவகாரம் வேறு உருவம் எடுத்தது.

இந்த வருடம் ஜனவரியில் இருந்து இதுவரை இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பலதடவைகள் பேச்சுக்கள் நடந்தன. இந்திய அரசும் தமிழ்க் குழுக்களும் பேசின. பின்னர் திம்புவில் இலங்கை அரசும் தமிழ்க் குழுக்களும் பேசின. பின்னர் பஹாமாஸில், ஓமானில் என்று பலப்பல சந்திப்புகள்.

பேச்சுக்கள் பல நடந்தாலும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்குப் பலாபலன் எதுவுமே கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் துன்ப துயரம் எதுவும் நீங்க வழியுமில்லை. இத்தகைய நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இன்று நடக்கும் ராஜீவ் — ஜே. ஆர். பேச்சு எப்படி அமையும்? பழைய பேச்சுக்களின் கதிதானா? அல்லது புதிய திருப்பம் ஏற்பட்டு, இனப்பிரச்சினை என்ற இருளுக்குள் ஓர் ஒளிக்கீற்றையாவது பாய்ச்சுமா என்ற கேள்வியே தமிழ்மக்கள் மனமெல்லாம் நிறைந்திருக்கிறது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற இதயசுத்தி இலங்கை அரசாங்கத்துக்கு இருக்குமானால் ஏதோ ஒரு வகைப் பயனாவது கிடைக்கலாம். வெளி உலகத்துக்குக் காட்டுவதற்காக பேச்சுவார்த்தை மேசைகளில் போய் குந்திவிட்டு நாடு திரும்பியதும் முரண்பாடாகப் பேசுவதும் செயலாற்றுவதும் தான் இந்த நாட்டு அரசின் வழக்கமாகி வந்து விட்டது. உள்ளார்ந்த மனவிருப்புடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டால் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க முடியாமல் இல்லை.

இனப்பிரச்சினையின் தாக்கத்தை இந்தியாவை விட இலங்கைதான் அதிகம் உணர்ந்தும், அனுபவித்தும் இருக்க வேண்டும். எனவே இந்தியா ஒரு தீர்வை திணிக்கும்வரை இலங்கை அரசு காத்திருப்பது விவேகமல்ல.

அரசியல் தீர்வா, இராணுவத் தீர்வா என்று தீர்க்கமாக முடிவு செய்தால் மட்டுமே இலங்கையினால் பேச்சுகளில் பயனுள்ள முறையில் பங்காற்ற முடியும். அரசியல் தீர்வு என்று கூறி இராணுவத் தீர்வை நோக்கி நகர்ந்தால் அது எல்லோருக்கும் ஆபத்து.

இதனை உணர்ந்து இம்முறையாவது இலங்கை அரசு நடந்து கொள்கிறதா எனப் பொறுத்து இருந்து பார்ப்போம்.

## வடமராட்சி எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குங்கள்

### பருத்தித்துறை பிரஜைகள் குழு அரசாங்க அதிபரை கோருகிறது

பருத்தித்துறை, டிச 7

வடமராட்சிப் பகுதியில் எரிபொருள் பற்றுக்குறை இருந்துவருகிறது. இப் பற்றுக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு பருத்தித்துறை பிரஜைகள் குழு யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கோரிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

எரி பொருள்களை ஏற்றி வரும் பௌசர்களை சொந்தமாக வைத்திருக்கும் எரிபொருள் விற்பனையாளர்கள் கிளிநொச்சியில் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு செய்யவேண்டும்.

பௌசர்களை வாடகைக்கு அமர்த்தி எரிபொருள்களைக் கொள்வனவு செய்யும் எரிபொருள் விற்பனையாளர்கள் யாழ்ப்பாணத்தில் எரிபொருள்களை கொள்வனவு செய்யக்கூடிய வகையிலும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வாடகைக்கு பௌசர்கள் அமர்த்தப்படும் போது பௌசர் உரிமையாளர்கள் தத்தமது பகுதி எரிபொருள் விற்பனையாளர்களுக்கு முன்னுரிமை வழங்க அறிவுறுத்த வேண்டும். இல்லையேல் பௌசர் உரிமையாளர்களின் அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்ய வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில்

# இந்தியாவுக்கு இப்போது அதிக பொறுப்பு உண்டு

### அமிர்தலிங்கம் 'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்குப் பேட்டி

ஆகஸ்ட் 1983இல் இலங்கைஇனப்பிரச்சினையில் இந்தியா காட்டிய அக்கறையிலும் பார்க்க இப்பொழுதுதான் இந்தியாவிற்கு மிகப் பெரிய பொறுப்பு உண்டு.

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளமுடியாது என்ற நிலையை, இந்தியா இனி எடுக்கமுடியாது.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வந்ததே இந்தியா. அதன்பின்னர் பேச்சுக்களில் கலந்து கொள்ளமுடியாதுஎன்ற நிலையை இந்தியா எடுக்க முடியுமா? தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் 'புரொன்ட் லைன்' (நவ 30–டிச 13) சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பேட்டி விபரம் வருமாறு:—

கேள்வி: இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய நிலையில் முரண்பாடு உண்டா?

ஒருபுறம் இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களில் பங்குகொள்ள முடியாது, மாட்டோம்என்று இந்தியா கூறுகின்றது.

மறுபக்கத்தில் யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வந்ததும் நகல் திட்ட யோசனைகளைத் தயாரிக்க உதவியதும்இந்தியாவே.

அமிர்; நீங்கள் பாருங்கள், ஜுலை 1983இல் இந்தியா தனதுஉதவியை அளிக்கத் தொடங்கியது. இனப்பிரச்சினைக்குஇறுதியும் முடிவுமான தீர்வு ஒன்றுகாண இந்தியா உதவும் என்று அன்று இந்திராகாந்தி கூறினார். அதன்தொடர்பாக சிறப்புப் பிரதிநிதியாக திரு. ஜி. பார்த்தசாரதியை கொழும்புக்கு அனுப்பினார். எம்முடன் ஆலோசித்துவிட்டு அவர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதுதான் பேச்சுவார்த்தையின் அடிப்படை.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா அதற்கு ஒரு பதில் அளித்தார். மேலும் பேச்சுவார்த்தைகளின் பின்னர் 'சி' இணைப்புத் தயாரிக்கப்பட்டது.

கேள்வி: அதன்பின்னர் இந்தியாவின் எண்ணத்தில், நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று எண்ணுகிறீர்களா?

பதில்: அந்தச் சமயத்தில் இந்தியா மத்தியஸ்தம் செய்வதை திட்டமிட்ட ரீதியில் நடத்தியது.

இன்று இந்தியா நடந்துகொள்ளும் விதம் வித்தியாசமானது.

யுத்தநிறுத்தஞ் செய்ய வேண்டுமென்பதில் இந்தியா நேரடி அக்கறை காட்டியது. போராளிகளை டில்லிக்கு அழைத்தனர். அங்குவைத்து யுத்த நிறுத்த யோசனைகள் இறுதியாக்கப்பட்டன.

அதன்பின்னர் நடவடிக்கைகள் இழுபறியாகின்றன. எல்லாம் மெதுவாகத்தான் நடக்கிறது.

கேள்வி: அதற்கான காரணங்கள் என்ன?

பதில்: காலம் கடத்துவதுதான் இலங்கை அரசாங்கத்தின் வழமையான போக்கு.

கேள்வி: நடப்பு நிலைமையில் இந்தியாவின் போக்கு எப்படியானது?

இந்திராகாந்தி நிலையில் இருந்து யதார்த்தமான முறையில் மாற்றம் உள்ளதாக நான் நினைக்கவில்லை. ஆனால் இந்தியாவின் அணுகுமுறையில்தான் மாற்றம் உண்டு.

ஆகஸ்ட் 1983 நிலையிலும் பார்க்க இப்பொழுதுதான் இந்தியாவின் பொறுப்பு மிக அமைதியாகவுள்ளது என்றுநான் உணர்கிறேன்.

காரணம், யுத்த நிறுத்தம் ஒன்றை அமுலுக்குக்கொண்டுவர இந்தியா நேரடி அக்கறை காட்டியது.

தற்போதைய நெருக்கடியில் தமிழ்மக்களுக்கு உதவுவது. இரண்டுகாரணிகளே.

ஒன்று—போராளிகளின் நடவடிக்கைகள், இரண்டு இந்தியாவின் பங்கு.

யுத்த நிறுத்தம் காரணமாக போராளின் நடவடிக்கைகள் நின்றுவிட்டன.

ஆகவே இந்தியாவின் பங்கு பலனளிக்கக்கூடியதாக அமையவேண்டும். இலங்கை அரசு மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கவும் வேண்டும்.

இந்தியா அப்படிநடக்கவில்லை என்பதே எங்கள் முறைப்பாடு.

அபபடிநடக்கவேண்டுமென்பதே எங்கள் வேண்டுகோள்.

கேள்வி: இந்தியாவின் அணுகு முறையில் ஏன் இநத மாற்றம்?

பதில்: இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் நிச்சயம் ஒரு மாற்றம் உண்டு.

அயல் நாடுகளுடன் இந்தியா நட்பாக இருக்க அக்கறைகாட்டுகின்தது. அயல்நாடுகளைக் கூடுமானவரை அணைத்துக் கொள்ளவே இந்தியா விரும்புகின்றது.

அதனால்தான் அந்த மாற்றம்.

எமது பிரச்சினையைப் பொறுத்த அளவில், இந்தியா சிறந்த ஒரு ராஜதந்திரக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது.

கேள்வி: என்ன கருத்தில்.....

பதில்: இந்தியா தனது கையை விரித்துக் காட்டுகின்றது.

போராளிகள் இந்தியாவில் இருக்கின்றார்கள் என்பதை இந்தியா ஏற்றுக் கொண்டது. போராளிகளுடன் பேசக்கூடிய நிலையில், வழிகாட்டக் கூடிய நிலையில், கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் இந்தியா உள்ளது.

முன்னர் அப்படிஅல்ல, இப்பொழுது உள்ள நிலை நல்லது என்று நான் நினைக்கவில்லை.

ஏனெனில் இது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வைக்கக்கூடியதாக இந்தியா போராளிகள் மீது செல்வாக்கைப் பிரயோகிக்க உதவும்.

கேள்வி: அதன்கருத்து, போராளிகள் மீது நிர்ப்பந்தம் செலுத்துவது என்றா?

பதில்: ஆம். போராளிகளின் நடவடிக்கைகளினால் வன்செயல்கள் அதிகரித்தால் இந்தியா மீது குற்றஞ் சுமத்தப்படும்.

அதனால்தான் இந்தியாவின் பொறுப்பு இப்பொழுது மிக அதிகமாகியுள்ளது என்று நான் கூறுகின்றேன்.

இலங்கை ஆயுதப் படையினர் மனித உரிமைகளை மீறி நடந்து வந்துங்கூட இலங்கை அரசாங்கத்தைக் கண்டிக்க இந்தியா இன்று தயக்கம் காட்டுகின்றது.

கேள்வி: வவுனியா, திருமலை படுகொலைகள் பற்றியா நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

பதில்: ஆம். ராஜதந்திரரீதியில் ஆட்சேபனைகளை இலங்கை அரசிடம் கூறிவருகின்றோம் என்று பிரதமர் ராஜீவ் காந்தி 1985இல் சொல்லுகின்றார்.

முன்னர் திருமதி. இந்திரா காந்தி பகிரங்கமாகவே நாடாளுமன்றத்தில் கண்டனம் செய்தார்.

இனப்படுகொலை என்றும் இந்திரா கண்டனம் செய்தார்.

இந்திராவின் இதேநிலை 1985 மே மாதம் வரை நிலவியது.

இளை அமைச்சர் குர்ஷித் ஆலம்கானும் நாடாளுமன்றத்தில் இப்படிச் சொன்னார்.

அதன் பின்னர் தான் இந்த மாற்றம்.

இந்தியாவின் தற்போதைய அணுகுமுறை வெற்றியளிக்க வேண்டும் என்றால் இந்தியா, இலங்கை மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்க வேண்டும். இப்படி நான் கருதுகின்றேன்.

1983 இல் ஐக்கிய நாடுகள் சபையிலும் இலங்கைக்குப் பதில் அளிக்கக்கூடிய நிலையில் இந்தியா இருந்தது. 1984 இலும் அதே நிலைமை தான்.

இப்பொழுது இந்தியா அபபடிச் செய்யவில்லை.

இலங்கையில் இடம் பெறும் இனப்படுகொலை சம்பந்தமாக அமைதியான சதி நடைபெறுகிறது போன்று தெரிகின்றது.

பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது இல்லை என்ற நிலையை இந்தியா எடுக்க முடியாது.

யுத்த நிறுத்தமே அவர்களால்தான் பேசித் தீர்க்கப்பட்டது. யுத்தநிறுத்தம் பற்றி பேசத் தயார், அடிப்படைப் பிரச்சினை பற்றி பேசத் தயாரில்லை என்று இந்தியாவினால் கூறமுடியாது.

கேள்வி: மாற்று யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் தமிழ் அமைப்புக்கள் சொல்ல வேண்டும்என்று பிரதமர் ராஜீவ் காந்தி, சென்னையில் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

பதில்: எனது கருத்து, நாம் எம் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவேண்டும்.

கேள்வி: யுத்த நிறுத்தம் அமுல்செய்யப்படுவதற்கும் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கும் இணைப்பு உண்டு என்று தமிழ் அமைப்புக்கள் கருதுகின்றன. பேச்சுவார்த்தை நடத்துவதற்கு யுத்த நிறுத்த அமுல் முன் நிபந்தனையா?

பதில்: அடிப்படைப் பிரச்சினைகள்மீது பேச்சுவார்த்தை நடத்தவே, யுத்த நிறுத்தம். இல்லாவிடில் தொடர்ந்து அவர்கள் போராடுவார்கள்.

ஆகவே முழுப்பிரச்சினையையும் அப்படியே விட்டு விட்டு, ஏதாவது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டு யுத்தநிறுத்தத்தை அமுல் நடத்துவதா?

நகல்திட்ட யோசனைகள் பற்றி எமது அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.

நகல்திட்ட யோசனைகளில் உள்ள சிலவற்றை நாம் ஆக்கபூர்வமாக விமர்சிக்கலாம் இது என் கருத்து. எமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்காது நகல் திட்ட யோசனைகளை ஏற்பதோ நிராகரிப்பதோ நமது எண்ணமில்லை.

நகல் திட்ட யோசனைகள் பற்றி எமது எண்ணங்களை இந்தியாவிடம் தெரிவித்தால், இந்தியா இலங்கையுடன் பேசி நாம் ஏற்கக் கூடிய ஒன்றைக் கொண்டுவர அவர்களுக்கு உதவலாம்,

கேள்வி: மற்ற அமைப்புக்கள் ஏற்கக் கூடியதான ஒன்றைக் கூட்டணி கொண்டு வரமுடியாதா?

பதில்: தமிழ் அமைப்புக்கள் பிரிந்து எதிர் எதிராக நிற்பதை நாம் விரும்பவில்லை. ஒவ்வொரு அமைப்பும் ஒவ்வொன்றைச் சொல்லக் கூடாது.

தமிழ் மக்களிடையே ஒற்றுமையின்மையை அது காட்டும்.

கிடைக்கும் தகவல்களின் படி, மக்கள் இன்னற் படுகின்றார்கள். விரக்தியின் விளிம்பிற்கே வந்து கொண்டு உள்ளனர்.

அதே நேரத்தில் மக்கள் இந்தியாவின் உதவியுடன் பயனுள்ள தீர்வையே எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கின்றார்கள். அப்படியான தீர்வு, தாங்கள் அடைந்த துன்பங்களை ஈடு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகிறார்கள்.

எல்லா அமைப்புக்களிடையேயும் ஒற்றுமையையே தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றார்கள்.

பேச்சு வார்த்தைகளில் இந்தியா தனித்து கலந்து கொள்ள அனுமதிப்பது நல்லது அல்ல என்று நாம் நினைக்கின்றோம்.

அப்படி விட்டால் இந்தியா பிடித்தமானதாகக் கருதும் தீர்வு முறை, எமக்குப் பிடிக்காத ஒன்றாக இருந்து விடக் கூடும்.

அப்படி இடம் பெறுவதை நாம் விரும்பவில்லை.

கேள்வி: இந்திய அரசின் நோக்கங்களுக்கும் தமிழ் அமைப்புக்களின் நோக்கங்களுக்கும் இடையேயான இடைவெளி எவ்வளவு பரந்துள்ளது?

பதில்: நான் அறிந்த வரையில் இந்தியா, தமிழருக்கு உதவுவதில் அக்கறை காட்டுகின்றது.

அதே நேரத்தில் சில எல்லைகளை மீறி இலங்கை அரசின் மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்க இந்தியா விரும்பவில்லை.

கேள்வி: இங்கு இருந்து எங்கே போக உள்ளீர்கள்? முட்டுக்கட்டையை எப்படி உடைக்கப் போகின்றீர்கள்?

பதில்: பேச்சுகளில் முன்னேற்றம் இல்லாததற்கு ஒரு காரணம், சுயாட்சி பற்றிய தனது முந்தைய நிலையில் இருந்து இலங்கை அரசு விலகாததே.

இன்னும் மாவட்ட சபை, மாகாணசபை முறையிலேயே இலங்கை அரசு ஒட்டிக் கொண்டு இருக்கின்றது.

நகல் திட்டயோசனைகளில் "வீட்டோகரத்து" ஷரத்து உள்ளது. அதை நாம் ஆட்சேபித்துள்ளோம்.

அந்த ஷரத்தின் படி, மாவட்டசபைகள் விரும்பினால் மாகாண சபையில் இருந்து விலகலாம். அத்துடன் மகாண சபை கலைக்கப்படும்.

பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட இந்த நிலையில் இருந்து இலங்கை அரசு விலக வேண்டும்.

ஈழம்தேசியவிடுதலைமுன்னணி திம்பு (2) மாநாட்டிலும்வெளியிட்ட நான்கு அம்சங்களும் தேவையானவை.

1951தமிழரசு மாநாட்டிலும் வலியுறுத்தப்பட்டவை இவை.

திம்பு 2ஆவது மாநாட்டில் பேசுகையில், இந்த நான்கு அம்சங்களும் சட்டபூர்வமானவையாக்கப் படவேண்டும் என்று நான் கூறினேன்.

கேள்வி: வடக்கு–கிழக்கு இணைப்பு பேசித் தீர்க்கமுடியாதது ஒன்றா?

பதில்: நல்லது. எமது மக்களை ஒன்றாக இணைத்துச் செல்ல வேண்டும். அதற்கு தமிழ்ப் பகுதிகள் ஒன்றாக இருக்க வேண்டும்.

இணைப்பு இல்லாவிட்டால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவது தொடரும். இதுதான் பிரதானமான அச்சம்.

குடியேற்றத் திட்டங்கள் அப்பகுதியில் தமிழர்களை சிறுபான்மையினராக்கி விட்டன.

இதனை திருத்துவதற்கு ஒரேவழி இணைப்புத்தான்.

எல்லைகளை உரிய முறையில் சரிப்படுத்துவதன் மூலம் ஏற்படும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் அகதிகளுக்கு உடுப்புப் பார்சல்

நல்லூர், டிச 7

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள திருமலை அகதிகளுக்கு 178 உடுப்புப் பார்சல்கள் வழங்கப் பட்டன.

இந்து விஸ்வப்பரிசாத் சைவமகளிர் பேரவை இந்த உடுப்புப் பார்சல்களை அனுப்பி வைத்தது.

நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அகதிகளுக்கு இவைகளை வழங்கினார்.

பொய்யாமொழி



வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.

மழைபெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத் தக்கதாகும்.

## தமிழரிடமிருந்து பறிக்க முடியாத ஒரே சொத்து கல்வி

### கலைஒளி மன்ற விழாவில் உரை

சுன்னாகம், டிச 7

யாழ்ப்பாண மண்ணுக்கு நீண்டகாலமாக இருந்து வரும் விசேஷ தன்மை கல்விச் சிறப்பாகும். தமிழ்ச் சமுதாயத்திடமிருந்து எவராலும் பறிக்க முடியாத ஒரே சொத்தாக கல்வி இருக்கிறது. இன்றுள்ள இக்கட்டான நிலையில் எமது சமுதாயம் தனது முழு சக்தியையும் எதிர்கால சந்ததியினரின் கல்விக்காக செலவு செய்தல் பொருத்தமானது.

உடுவில் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இணுவில் சைவ மகா வித்தியாலயத்தில் ஞாயிறு பிற்பகல் நடந்த இணுவில் கலை ஒளி மன்றத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் அவர் பேசினார்.

கல்வியில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறி வருகிறோமோ அதே அளவு எமது வளர்ச்சி உயர் நிலையை அடையும் என்றும் அவர் கூறினார்.

விழாவுக்குத் தலைமை வகித்த யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா பேசியதாவது–; " கல்வியறிவில் ஆண்களா அல்லது பெண்களா சிறந்து விளங்குகின்றார்கள் என பல மேலைத் தேசநாடுகள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டன. எனினும் கல்வித்துறையில் ஆண் — பெண் பால் வித்தியாசம் இருந்ததாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கவில்லை.

எனவேதான் எமது பிரதேசத்திலும் பால் வேறுபாடின்றி எல்லா மாணவருக்கும் சிறப்பான கல்வியைப் போதிக்கும் பணியை ஆசிரிய சமூகம் செய்துவருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. பேரம்பலம் தமது உரையில் பாடசாலைகளில் ஒழுக்கம் நிறைந்த மாணவர்கள் உருவானால்தான் நெருக்கமான சமுதாயம் உருவாகும் வாய்ப்பு ஏற்படும் என்றார்.

யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு. இ. சுந்தரலிங்கம் உரையாற்றுகையில் கழகத்தின் 20 ஆண்டு பணியை பாராட்டிப் பேசினார்.

கணிதம், விஞ்ஞானம், பொது அறிவு ஆகிய பாடங்களில் நடத்தப் பட்ட பரீட்சைகளில் பரிசு பெற்றோருக்கு உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

## வித்தாரம்



என்னடா தம்பி முரளி ஒருசின்னத்தடிமலுக்கும் ஆஸ்பத்திரிக்குப்போட்டு வாறியாக்கும். ஆபத்து நிறைந்த வியாதிகளுக்குக்கூட அங்கை மருந்தில்லை எண்டு டாக்குத்தர்மார் அழுகினம். நீ ஏன் அங்கை போனனி.

இப்ப எல்லாம் தடிமல் ஒரு வியாதியே வித்தைச் சுடுதண்ணியில போட்டு, ஆவி பிடிச்சால் அது பறந்துபோகாதே!

அது இருக்கட்டும் ஆஸ்பத்திரிப் பக்கம் போனதுஉன்ரை சைக்கிள் தப்பிச்சுதே?

என்ன அங்கை நாளுக்குநாள் சைக்கிள் களவு கூடுதலாமோ? ஓம் ஓம் எங்கடை எம். எஸ்ஸும் நேற்றைக்கு டெலிபோனிலை கதைச்சப்போது அதைத்தான் சொன்னார்.

என்னடா ஏதடா எண்டு நான் திகைச்சுப் போனேன். சுகமில்லையெண்டு சிகிச்சைக்கு "ஓ. பி. டி"க்கு போறவையின்டை சைக்கிள்களைத் தானாம் அதிகம் களவாடுகினம் ஒருநாள் மட்டும் நாலு சைக்கிள்களைக் காணயில்லையாம்.

சிகிச்சைக்குப் போறவை நல்ல வடிவா அதுக்கெண்டு இருக்கிற "பாக்கிலை" வைச்சால் இது நடவாது. சுகத்துக்காக அங்கினையிக்கை உள்ள மரங்களுக்குக் கிழை வைச்சுவிட்டுப் போகினம். கள்ளன்களும் தருணம் பாத்துத் திருடுறுங்கள்.

சைக்கிள்தான் இப்ப யாழ்ப்பாணத்திலை போக்குவரத்துக்கு "நல்ல தொண்டனாக" இருக்குது. ஆனாலும் முந்தி ஸ்கூட்டர் வித்த காசு இப்ப சைக்கிள் விக்குது. இந்தக் கஷ்ட காலத்திலை ஒரு சைக்கிள் களவு போனால் எவ்வளவு கஷ்டம் என்டது களவு கொடுத்தவனுக்குத்தான் தெரியும் தம்பி.

எங்கடை சனம் படுற பாட்டைப்பற்றித் திருட்டுக் கும்பலுக்கு எங்கே கரிசனை. தங்களுக்கு கையிலை காசு வந்தால் சரி எண்ட நினைப்பு.

பொலிஸும் இல்லை ஒண்டும் இல்லைத்தானே. தங்கடை ஆட்டத்தை ஆடலாம் எண்டு நினைச்சிட்டினம்போலை.

ஆஸ்பத்திரிக்குப் போறவையளும் தங்கடை பொருள்களிலை கவனமாய் இருந்தால் களவைத் தவிர்க்கலாம் தானே.



தொண்டொமி

சகல விதமான தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) ரோனியோ வேலைகட்கும்
Teens Copy
514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
"TEENS COPY"



# உதயன்

7-12-1985



A/L Day Class
ஆரம்பம்: 9 — 12 — 1985
BOND INSTITUTES
274/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
BOND INSTITUTES


வவுனியாவில் யாழ். இளைஞர் கைதானதை அடுத்து

# ஓமந்தையில் படையினர் தேடுதல்

## ஐவருடன் திரும்பும்போது வழியில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம் டிச.7 ஓமந்தை கோழியன் குளத்தில் அதிகாலை 4.30 மணிக்குமுற்றுகை நடத்திய ஆயுதப்படையினர் நான்கு பேரைக் கைது செய்தனர். நால்வரும் விவசாயிகள் என்று கூறப்படுகிறது.

இந்த சம்பவத்துக்கு முதல் நாள் வவுனியா ரயில் நிலையத்தில் நக்கீரன் என்ற யாழ்ப்பாண இளைஞர் கைது செய்யப்பட்டார்.

இவர் கைதானதை அடுத்தே ஆயுதப்படையினர் ஓமந்தையில் தேடுதல் நடத்தினர்.

துரைசாமி சந்திரசேகரம் (வயது 24) இரத்தினம் செல்வநாயகம் (வயது31) க தர்மராஜா (வயது 36) சின்னத்தம்பி மகாலிங்கம் (வயது 42) ஆகியோரே கைதான விவசாயிகள் ஆவர்.

இந்த நால்வரையும் ஏற்றிக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்த போது வழியில் கொந்த காறன்குளம் என்ற இடத்தில் அன்ரன் என்பவரைக் கைது செய்தனர். அன்ரன் சுழிபுரத்தை சேர்ந்தவர்.

இந்த ஐவருடனும் ஆயுதப்படையினர் முகாமுக்கு திரும்பிக் கொண்டிருந்த போது வழியில் அவர்களின் டிரக்கின் மீது கிரனேட் வீசப்பட்டது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் கடை வைத்திருந்த இராமையா (56வயது) என்பவர் ஆயுதப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

அவர் தற்போது ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## அ. சவுக்கு சாகித்திய விருது

சென்னை, டிச.6 முதுபெரும் தமிழறிஞர் அ. ச. ஞானசம்பந்தனுக்கு சாகித்திய அக்கடமி விருது கிடைத்தது.

அவர் எழுதிய "கம்பன்—புதிய பார்வை" என்ற இலக்கிய விமர்சன நூலுக்கு 1985 – ஆம் ஆண்டுக்குரிய சாகித்திய அக்கடமி பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்திய நாணயப்படி ரூபா 10 ஆயிரமும் தாமரப் பத்திரமும் அவருக்கு பரிசாக வழங்கப்படும்.

## ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-00 | செய்தி |
| 5-05 | சப்மரினர்—காட்டூன் தொடர் |
| 5-10 | உங்கள் உடல் |
| 5-30 | உலக விளையாட்டு |
| 6-30 | செய்திகள் (தமிழ்) |
| 7-00 | 'தடிசெப்ஷன்' |
| 8-00 | செய்தி (சிங்களம்) |
| 8-25 | 'யசோரவாய' (ரெலி நாடகம்) |
| 9-00 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-15 | 'தங்க பத்ம' சங்கீத நிகழ்ச்சி |
| 9-50 | 'ராணியைக் காப்பாற்ற' துப்பறியும் தொடர்-ஆங்கிலம் |
| 10-40 | ஒளி பரப்பு முடிவு |

## இன்று

பருத்தித்துறை. டிச 7 பல்துறை சார்ந்த கலைஞர்களின் செவ்வித் தொகுப்பான 'தேன்பொழுது' நூல் வெளியீட்டு விழா இன்று 7ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை பார்வதவர்த்தனி கலா மண்டபத்தில் நடைபெறும்.

திரு. பொன். பூலோகசிங்கம், டாக்டர் கனக. சுகுமார் ஆகியோரால் எழுதப்பட்ட இந்நூலின் வெளியீட்டு விழாவிற்கு டாக்டர் எம் கே. முருகானந்தன் தலைமை வகிப்பார்.

பிரபல எழுத்தாளர் திக்கவயல் எஸ். தர்மகுலசிங்கம் நூலை அறிமுகம் செய்து உரையாற்றுவார். பிரபல தொழிலதிபர் திரு. அ. நாகரத்தினம், முதற்பிரதியைப் பெறுவார்.

## மட்டக்களப்பில் பெருமழை போக்குவரத்து துண்டிப்பு

மட்டக்களப்பு. டிச. 7 கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு முதல் வெள்ளிக்கிழமை நண்பகல் வரை மட்டக்களப்பில் இடைவிடாது பேய் மழை பெரும் வெள்ளம் போக்குவரத்துச் சேவை கடும் பாதிப்பு.

ரயில் சேவையும், ஏனைய போக்குவரத்து சேவைகளும் முற்றாக ஸ்தம்பித மடைந்திருக்கின்றன.

இதேவேளை நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் தொடக்கம் 48 மணி நேரத்தினுள் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்யலாம் என மட்டக்களப்பு வானிலை அவதானநிலையம் அறிவித்திருக்கின்றது.

அங்கு புகையிரத பாதைகள், வீதிகள் போன்றவை நீரில் மூழ்கியிருக்கின்றன.

பொலநறுவையிலிருந்து வெலிகந்தை வரையில ரயில் சேவை முற்றாகத்துண்டிக்கப்பட்டிருக்கின்றது.

## தியேட்டர் சுற்றி வளைப்பு

மட்டக்களப்பு,டிச. 7. மட்டக்களப்பு நகரிலுள்ள படமாளிகை ஒன்று நேற்றுப் பிற்பகல் அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

சோதனையின் பின்னர் படையினர் படமாளிகையின் சொந்தக்காரரிடம் சிரமத்துக்கு வருந்துவதாகத் தெரிவித்தனராம்.

## விளையாட்டரங்கு

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டம்

# மேற்கிந்தியா வெற்றி

ராவல்பிண்டி, டிச. 6 பாகிஸ்தானுக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத் தொடரில் மேற்கிந்தியா வெற்றி பெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் நான்கு ஆட்டங்களில் இரண்டில் பாகிஸ்தானும், இரண்டில் மேற்கிந்தியாவும் வெற்றி பெற்றன என்பது தெரிந்ததே.

வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் ஐந்தாவது (இறுதி) ஆட்டம் நேற்று கராச்சியில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் வெற்றியீட்டியதன் மூலம் மேற்கிந்திய அணி ஆட்டத் தொடரின் வெற்றியையும் தன்பக்கம் சேர்த்துக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஒதுக்கப்பட்ட 38 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 127 ஓட்டங்களைப் பெற்றது.

மொஷின் 54, இம்ரான் கான் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

மேற்கிந்திய அணி 34 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ஹெயின்ஸ் 39 ஓட்டங்களையும் ரிச்சர்ட் கோம்ஸ் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 40, 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

நேற்று இந்த ஆட்டம் நடைபெற்ற போது இடைநடுவில் ரசிகர்கள் மைதானத்தில் இறங்கிக் குழப்பினார்கள். பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்யவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

## கரவெட்டியில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

கரவெட்டி, டிச. 7 கரவெட்டி அறிவொளி சனசமூக நிலையத்தின் எட்டாவது ஆண்டு நிறைவையொட்டி 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடைபெற இருக்கிறது.

எதிர்வரும் தைப் பொங்கல் தினத்தில் இச் சுற்றுப் போட்டி ஆரம்பமாகும். ஆட்டங்கள் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் சனசமூக நிலைய செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்.

## பிரிமா மாமூடை கடத்திய லொறி பொலனறுவையில் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம் டிச, 7 பிரிமா மாமூடைகளுடன் கடத்தப்பட்ட லொறி பொலன்னறுவையில் உள்ள வீடு ஒன்றின் அருகில் நிற்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட 150 மூடை மாவும் இன்னொரு லொறியில் ஏற்றப்பட்டு கோட்டே பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டதாக பொலீஸார் கூறுகின்றனர்.

கடவத்த என்ற இடத்தில் உள்ள வருககுச் சொந்தமான லொறியிலேயே கோட்டேயை நோக்கி மா ஏற்றிக் கொண்டு போகப்பட்டது என்றும் தெரியவந்துள்ளது.

இராணுவ உடையில் வந்த மூன்றுபேர் மாவுடன் டிரக்கை அளுத் ஓயா என்ற இடத்தில் வைத்து கடத்திச் சென்றிருந்தனர் என்பது தெரிந்ததே.

மாவையும் டிரக்கையும் கடத்திச் சென்று கொள்ளை அடித்தவர்கள் கொள்ளைக்காரர்கள் என்றும், போராளிகள் என்ற போர்வையில் இச்செயலில் ஈடுபட்டனர் என்றும் பொலீஸ் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

## மட்டக்களப்பில் 425 குடும்பங்களுக்கு உணவுப் பங்கீடு

மட்டக்களப்பு, டிச. 7 மட்டக்களப்பு வெல்லாவெளி, ஒந்தாச்சிமடம், மண்டூர் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளான 425 குடும்பங்களுக்கு மாதாந்த உணவுப் பங்கீட்டு உதவி வழங்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

425 குடும்பங்களையும் சேர்ந்த 2365 பேருக்கே இந்த உதவி வழங்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்ட சமூகசேவைகள் பிரிவு பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். ஆனந்த மனோகரன் புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

## வவுனியாவில் வீடு தரைமட்டம்

யாழ்ப்பாணம், டிச. 7 வவுனியா குருமண்காடு என்ற இடத்தில் உள்ள ஒரு வீடு தரை மட்டமாக்கப்பட்டது.

இதற்கு முன்னர், வவுனியா ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்து இளைஞர் ஒருவர் சீருடையினரால் கைது செய்யப்பட்டார்.

## அறுவரின் சடலங்கள் விறகு காலையில் எரிக்கப்பட்டன

திருகோணமலை டிச. 7 துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி இறந்த அறுவர் அடையாளம் காணப்படாத நிலையில் விறகு காலை ஒன்றுக்குள் போடப்பட்டு எரிக்கப்பட்டனர்

தம்பலகமம் கிராமத்தில் நவம்பர் 28 இல் நடந்த பயங்கர சம்பவத்தில் உயிர் தப்பிய மூவர் நடந்த விவரங்களை திருகோணமலை பிரஜைகள் குழுவிற்குத் தெரிவித்தவர்.

அப்பொழுது அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

இச்சம்பவம் தொடர்பாக 111பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று திருகோணமலை பிரஜைகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப் பட்டது.

"இறந்தவர்கள் அனைவரும் விவசாயிகள். நெற் பயிர்களுக்கு காவலாக வயல் வாடிகளில் தங்கியிருக்கையிலேயே இவர்கள் சீருடையினரால் அழைத்து வரப்பட்டனர்.

"தம்பலகமம் கோணேசர் ஆலயத்திற்கு அருகில் உள்ள தேநீர் கடை ஒன்றின் முன்னால் வைத்து இவர்கள் சுடப்பட்டனர். இவர்களில் மூவர் தப்பிவிட்டனர்.

கே, செல்லப்பா வி. மதியன், எஸ். கணபதிப் பிள்ளை ஆகியோரே தப்பியவர்கள்.

"இறந்த ஆறுபேரும் பின்னர், விறகு காலை ஒன்றுக்குள் போடப்பட்டு எரிக்கப்பட்டனர்.

"நாம் தொழில் செய்ய பாதுகாப்புத் தேவை"- இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது. திருமலை பிரஜைகள் குழு, இந்த மகஜரை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பிவைத்துள்ளது.

## மட்டக்களப்பு அரச பண்டசாலையில் இரண்டாம் முறை கொள்ளை

மட்டக்களப்பு அரசாங்க பண்டசாலையில் இரண்டாவது முறையாகக் கொள்ளையடிக்கப் பட்டது. 300 மூடை அரிசி உட்பட 1லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப் பட்டன.

இனந் தெரியாத கோஷ்டி ஒன்று காவலாளியைக் கட்டி வைத்து விட்டு தாம் கொண்டு வந்த 7 லொறிகளிலும் 5 டிப்பர் பெட்டிகளிலும் பொருள்களை ஏற்றிச் சென்றது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பண்டசாலையில் இருந்த மிகுதி அரிசி மூடைகள் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு அண்மையிலுள்ள கூ.மொ.வி. நிலைய கட்டடத்துக்கு ஏற்றி இடம் மாற்றப்பட்டன.

சென்றமாத இறுதிப் பகுதியிலும் சுமார் 2லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் இங்கிருந்து கொள்ளையடிக்கப்பட்டன.

## தினம் 20பேருக்கு மட்டும் நகைகள் திருப்பி ஒப்படைப்பு

நல்லூர்,டிச 7 யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதி, மக்கள் வங்கி சாவகச்சேரி மக்கள் - காங்கேசன்துறை மக்கள் வங்கி ஆகியவற்றில் நகை அடகு வைத்தவர்களில் தினமும் 20 பேருக்கு மட்டுமே நகைகள் திருப்பி வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தொகை மிகவிரைவில் அதிகரிக்கப்படலாம் என்று தெரிகிறது.

## மினி வான்மோதி இளைஞர் மரணம்

வேலணை டிச. 7. மினிவான் மோதி இளைஞர் மரணமானார்.

வேலணையைச் சேர்ந்த எஸ். சிவபாதசுந்தரம் (34வயது) என்பவரே இறந்தவர் ஆவார். இந்த விபத்து வியாழனன்று நடந்தது.

## இந்தியாவுக்கு...

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

இணைப்பு, சிங்கள மக்களை பாதிக்காது.

கேள்வி: இப்பொழுது என்ன செய்ய வேண்டி உள்ளது?

பதில்: பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று உள்ளத்தில் இருந்து எழும் உணர்வு இலங்கை தரப்பில் இருக்க வேண்டும்"

யுத்த நிறுத்தம் பலன் உள்ளதாக இருக்க வேண்டும்.

இலங்கையின் நேர்மையில் நாம் சந்தேகப்படுகின்றோம்.

அதனால் தான் போராளிகள் ஒன்றையும் கூறுமல் இருக்கின்றார்கள்.

அப்படி போராளிகள் எதையாவது கூறியவுடன் அதனைப் பாவித்து போராளிகளை, அவர்களின் உறுப்பினர்களிடையே செல்வாக்கு இழக்கச் செய்வதில் இலங்கை அரசு ஈடுபடும்.

வேறு பலன் எதுவும் வராது.

ஆகவே இந்தியாதான் இலங்கையின் நேர்மை பற்றி உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

தீர்வு, காணுவதற்கு மட்டுமல்ல, அது அமுல் நடத்தப்படுவதற்கும் இந்தியாதான் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

-பேட்டி கண்டவர் மாலினி பார்த்தாரதி

## பிரச்சினைக்கு தீர்வு....

1-ஆம் பக்கத் தொடர்ச்சி

யோசனையையும் இணைத்த ஒரு திட்டம் பற்றியே நாம் நினைக்கின்றோம்.

"மலையகத் தொழிலாளர், வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் ஆகியோர்பற்றியும் நாம் கவனத்திற்கு எடுத்துள்ளோம்.

அவர்களுக்குக் "காண்டன்" மாதிரியான திட்டம் ஒன்றை நாம் ஆலோசனை செய்துள்ளோம்.

ஆனால் யுத்த நிறுத்தம் சரிவர அமுல் நடத்தப்படும்வரை நாம் இந்த யோசனைகளை சமர்ப்பிக்க மாட்டோம்

இப்படி திரு. உமா மகேஸ்வரன் பேட்டியில் குறிப்பிட்டார்.

திரு. உமாமகேஸ்வரனின் பேட்டி முழுவிபரம் நாளை உதயனில் வெளியாகும்.


# அபுதாபி

## உங்களை அழைக்கிறது!

அபுதாபியில் பொதுப் பணியாளர்கள் உடன் தேவைப்படுகின்றனர்.

அதற்கான நேர்முகப் பரீட்சை

9-12-85 திங்கட்கிழமை

கொழும்பில் நடைபெறுகின்றது

பாஸ்போட்டுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்

லிப்ருஸ் லிமிட்டெட்

R. G. கட்டடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

60, Sea Beach Road,
PETTAH,
T' Phone: 29148

நீங்களும் வெளிநாடு செல்லலாம்!

• மேற்கு ஜெர்மன் • பிரான்ஸ் • இத்தாலி

எமது பிரதிநிதி உங்களைப் பாதுகாப்பாக இங்கிருந்து மாதம் இரு தடவ அழைத்துச் செல்வார்.

சகல விமான டிக்கெட்டுகள், பாஸ்போர்ட், பொண்ட், விசா என்பவற்றிற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.


## கோணேசர் ஆலயம் அருகில் கொலையுண்டோர் அடையாளம் காணப்பட்டனர்

திருகோணமலை டிச, 7 தம்பலகமம் கோணேசர் ஆலயத்திற்கு அருகில்வைத்து கொலையுண்டு எரிக்கப்பட்ட ஆறு தமிழர்களும் அடையாளங்காணப்பட்டனர்.

அவர்கள் இரண்டு பேர் சிறுவர்கள்,

இறந்தவர்களின்விபரம் வருமாறு:

பொன்னம்பலம் அருணாசலம், (வயது 15), ரி. விஜயரத்தினம், (வயது 14), எம். குவேந்திரராஜா, (வயது 40) கே, நவரத்தினம், (வயது 45) கே. மார்க்கண்டு, (வயது 50), அப்துல் சமது (வயது 60) ரி. கணேசபிள்ளை(வயது 45).

12-11 1985 இலும் தம்பலகமம் கிராமத்தில் இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டனர் அவர்களும் அடையாளங்காணப்பட்டனர். அவர்கள் வருமாறு:

கே. மகேந்திரன் (வயது 40) எம். செல்லராஜா, (வயது 60) அனைவரும் விவசாயிகள்.

## அடையாள...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கல்வித் திணைக்களத்தில் வைக்கப்படுகின்றது.

இப்படி இதுவரை 1,500 பரீட்சார்த்திகளுக்கு பணிப்பாளர் அத்தாட்சி வழங்கியுள்ளார்.


## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**எழுதுவினைஞர் பதவி (ஆண்)**

* 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
* விளையாட்டுத்துறை தகைமைகள், கல்வி கற்ற பாடசாலை ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**டைப்பிஸ்ட் (பெண்)**

* பிரபல நிறுவனங்கள் ஏதாவது ஒன்றில் குறைந்தபட்சம் மூன்று வருட முன் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**கார் டிரைவர்**

* 25 தொடக்கம் 35 வயதுடையவராகவும், கார் ஓட்டுவதில் முன் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விளம்பர இல. 5, மே.பா. 'உதயன்', தபாற் பெட்டி எண்: 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பத்தை அனுப்பவும்.



அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உ.மா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியிட்ட திகதி: 7-12-1985